Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

மலர் 4 | மட்டக்களப்பு | ஆனி — 1972 | விலை 30 | இதழ் 6

# லூர்து மாதாவின் பாலையூற்றுத் திருப்பதி.

(பிரிஜட் - பாலையூற்று)

கணீர்! கணீர்! என ஒலிக்கும் மணியோசை! கானகத்தின் நடுவே அமைந்துள்ள லூர்து அன்னையின் கோவில் மணி ஓசை தான் அது. வானளாவிய மரங்கள் சூழ்ந்துள்ள இடமான மலைக்குன்றுகளின் நடுவே உள்ள கெபியில் அன்னை காட்சியளிக்கின்றுள். பார்ப்போர் பரவசம் கொள்ளக்கூடிய அந்த இடமானது இற்றைக்கு 70 வருடங்களுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கையின் மத்திய, வட மாகாணங்களிரண்டிலும் கொள்ளை நோய் அதிவேகமாகப் பரவியது.அதனின்று மட்டக்களப்பையும் பீடித்ததோடமையாமல் கரையோர மாகாணமாகிய திருகோணமலையையும் நோக்கியது. அவ்வேளை அங்கு கடமையாற்றிய கட்டளைக் குரு வண. ஹெம்பக்கர் இ.ச. சுவாமியவர்கள் இந்நோய் திருகோணமலை மக்களை பீடிக்காமலிருப்பதற்காக ஓர் நேர்த்தி வைத்தார். அஃது:- ஒரு கெபி இயற்றி அதில் தேவதாயாரை ஸ்தாபிப்பதேயாம். சுவாமியாரின் மன்ருட்டுக் கேட்கப்பட்டது. அதன்படி திருகோணமலையிலிருந்து மூன்று மைல்களுக்கப்பால் ஒரு கானகத்தின் நடுவே இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு

[10ம் பக்கம் பார்க்கவும்]



பாலையூற்றுத் திருப்பதியின் தோற்றம்.

"திருச்சட்டத்தை அழிக்கவல்ல நிறைவேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

## (துணை ஆயர்)

## (35) உறுதிப்பூசுதல் அளித்தற்குரிய புதிய சடங்கு முறை.

திவ்விய பூசைப்பலியின்போது உறுதிப் பூசுதல் அளித்தற்குரிய புதிய சடங்குமுறை பின்வரும் பிரிவுகளை அடக்கியுள்ளது:

1. இறைவார்த்தை வழிபாடு, 2. ஆயரின் அருளுரை, 3. ஞானஸ்நான வாக்குறுதிகளைப் புதுப்பித்தல், 4. கைகளை விரிக்கும் சடங்கு, 5. பரிமள தைலத்தால் பூசுதல், 6. விசுவாசிகளின் விசேஷ மன்றாட்டு, 7. நற்கருணை வழிபாடு, 8. விசேஷ இறுதி ஆசீர்.

1. இறைவார்த்தை வழிபாடு:- உறுதிப்பூசுதல் பெறுவோரும், அவர்கள் பெற்றோர் ஞானப்பெற்றோரும், ஆயரும் பவனியாக ஆலயத்துள் நுழைந்தபின், இறைவார்த்தை வழிபாடு வழமைபோல் நடைபெறும். இவ்வழிபாட்டிற்குரிய பொருத்தமான திருவாசகங்கள் சிறப்பாகத் தெரிந்தெடுக்கப்படலாம்.

2. ஆயரின் அருளுரை:- திருவாசகங்களை ஆதாரமாகக்கொண்டு, உறுதிப்பூசுதல் பெற விருப்பவர்களுக்கு ஆயர் திருவருட்சாதனத்தின் மறைபொருளை விளக்கி அருளுரை நிகழ்த்துவார்.

3. ஞானஸ்நான வாக்குறுதிகளைப் புதுப்பித்தல்:- ஞானஸ்நானம் பெற்றபோது செய்யப்பட்ட வாக்குறுதிகள் உறுதிப்பூசுதல் பெறமுன் மிகவும் பொருத்தமாகப் புதுப்பிக்கப்படுகின்றன. இதனால் உறுதிப்பூசுதலுக்கும் ஞானஸ்நானத்திற்குமுள்ள நெருங்கிய தொடர்பு சுட்டிக்காட்டப்படுகின்றது.

4. கைகளை விரிக்கும் சடங்கு:- அப்போஸ்தலர் விசுவாசிகள்மேல் தங்கள் கைகளை விரித்துப் பரிசுத்த ஆவியை அளித்ததன் நினைவாக, ஆயர் உறுதிப்பூசுதல் பெறவிருப்போர் எல்லோர்மீதும் தமது கைகளைப் பொதுவாக விரித்து நீட்டி, ஞானம், புத்தி, அறிவு, திடம், பத்தி, விமரிசை தேவபயம் என்னும் கொடைகளை அளிக்கும் பரிசுத்த ஆவியை அவர்கள் மேல் அனுப்பியருளும்படி இறை தந்தையை வேண்டுகின்றார்.

5. பரிமள தைலத்தால் பூசுதல்:- கைகளை விரிக்கும் சடங்கு முடிந்தபின் ஆயர் உறுதிப்பூசுதல் பெறவிருக்கும் ஒவ்வொருவரின் பெயரையும் உச்சரித்து அவர்களது நெற்றியில் பரிசுத்த பரிமள தைலத்தால் சிலுவை அடையாளம் வரைந்து, ''பரிசுத்த ஆவி என்னும் கொடையின் அடையாளத்தைப் பெற்றுக்கொள்'' என்று கூறுவார். அவ்வேளை உறுதிப்பூசுதல் பெறுபவரை ஆயரிடம் சமர்ப்பிப்பவர் அவரது வலது தோள் மேல் தனது வலது கையை வைத்திருப்பார். இதனால் உறுதிப்பூசுதல் பெறுகிறவர் மட்டில் பெரும் பொறுப்பைத் தான் ஏற்றுக்கொள்கிறார் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றார்.

6. விசுவாசிகளின் விசேஷ மன்றாட்டு:- பரிமள தைலத்தால் பூசும் சடங்கு முடிந்தபின் உறுதிப்பூசுதல் பெற்றவர்களுக்காக விசுவாசிகளின் விசேஷ வேண்டுதல் இடம்பெறும். இதனால் கிறிஸ்தவ சமூகம் உறுதிப்பூசுதல் பெற்றவர்கள்மீது எவ்வளவு கரிசனை கொண்டுள்ளது என்பது தெளிவாகக் காட்டப்படுகின்றது.

7. நற்கருணை வழிபாடு:- நற்கருணை வழிபாடு எவ்வித மாற்றமுமின்றி வழமைப் பிரகாரம் நடைபெறும். திருவிருந்துக்கு ஆயத்தமாகச் சொல்லப்படும் ஆண்டவர் கற்பித்த செபம் இன்று விசேஷ முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில், உறுதிப்பூசுதல் பெற்றவர்களில் பரிசுத்த ஆவியே செபிக்கின்றார். அவரது உதவியின்றி கிறிஸ்தவன் கடவுளை ''பரலோகத்திலிருக்கிற பிதாவே'' என்று அழைக்க முடியாது.

[10ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அப்போஸ்தலரான புனித தோமையார்

## (6) புனித தோமையாரின் திருவுடல் இப்போது எங்கே?

புனித தோமையாரின் திருவுடல் கி. பி. 2ம் நூற்றாண்டில் மெசபொத்தேமியாவி லிருந்த எதேசா நகருக்கு எடுத்துச் செல்லப் பட்டு, அங்கு ஒரு ஆலயத்தில் வைக்கப்பட் டது என்ற சீரியன் திருச்சபையின் பாரம் பரியக் கொள்கையை முந்திய கட்டுரையில் கூறினோம். ஆனால், 12ம் நூற்றாண்டில் எதேசா நகரம் மகமதியரின் தாக்குதல் களுக்கு இலக்கானதன் காரணமாக புனித தோமையாரின் திருவுடல் பாதுகாப்பிற்காக, முதலில் மத்தியதரைக் கடலிலுள்ள கியோஸ் தீவுக்கும், பின்பு 13ம் நூற்றாண்டில் அங் கிருந்து இத்தாலி தேசத்திலுள்ள ஓர்த்தோனு பட்டணத்திற்கும் கொண்டு போகப்பட்டது என்பது ஒரு பாரம்பரியக் கூற்று.

புனித தோமையாரின் திருவுடல் மயி லாப்பூரிலிருந்து எதேசா நகருக்கு உண்மை யாகவே கொண்டுபோகப்பட்டிருந்தால், அதற்குப்பின் திருயாத்திரிகர்கள் மயிலாப் பூரிலிருந்த அப்போஸ்தலரின் வெறுமை யான கல்லறையைத் தரிசிப்பதற்குப் பதி லாக, அவருடைய திருவுடல் இருந்த எதேசா அல்லது ஓர்த்தோனு பட்டணத்திற்கன்றோ சென்றிருப்பார்கள். ஆனால் அதற்கு மாறாக திருயாத்திரிகர்கள் மயிலாப்பூருக்குத்தான் தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்கள் என் பதை முந்திய கட்டுரையில் கண்டோம்.

லிஸ்பன் பட்டணத்தில் அண்மைக் காலத் தில் கண்டுபிடிக்கப்பட்ட சில பழங்காலத் தகவல்கள் புனித தோமையாரின் திருவுடல் மயிலாப்பூரிலிருந்து எதேசாவுக்குக் கொண்டு போகப்பட்டதை மறுக்கின்றன.

2ம் நூற்றாண்டில் புனித தோமையா ருடைய திருவுடல் முழுவதும் ஏதேசா நக ருக்கு எடுத்துச் செல்லப்படவில்லை; அவ ருடைய வலதுகை மட்டுமே கொண்டு போகப்பட்டது, என்று 1947ல் கண்டெடுக் கப்பட்ட கி. பி. 2ம் அல்லது 3ம் நூற் றாண்டிற்குரிய கல்வெட்டு ஒன்று கூறுகின்றது: ''மேற்கிலுள்ளவர்கள் புனித வேதசாட்சியின் (தோமையாரின்) கீர்த்தியை அறிந்ததும், அவர்களின் அரசன் புனித தோமையாரின் வலது கையைத் தங்கட்குத் தரும்படி இந் தியாவின் அரசனிடம் விண்ணப்பித்தான். அதை அவன் மனப்பூர்வமாக அளித்தான்'' இவ்வாசகம் ஒரு கற்சிலுவையில் பொறிக்கப் பட்டுள்ளது.

புனித தோமையாரின் திருப்பண்டங்கள் எதேசாவில் மட்டுமல்ல, இந்தியாவிலும் தொடர்ந்து இருந்து வந்தன என்பதற்கு கி. பி. 4ம் நூற்றாண்டில் எதேசாவில் வாழ்ந்த புகழ்பெற்ற திருமறைப் பண்டிதரும் புலவரு மான புனித எபிரேம் எழுதிய சில பாடல் களும் சான்று பகருகின்றன: ''தோமையார் இந்தியாவிலும் எதேசாவிலும் புதுமைகள் செய்கின்றார்'' என்று ஒரு பாடல் கூறுகின் றது. ''இந்தியாவில் நான் கொன்ற அப் போஸ்தலர் எனக்குமுன் எதேசா வந்துவிட் டார். தனது வலிமை மிக்க ஆற்றலால் அவர் இங்கு மிருக்கின்றார், அங்கும் (இந்தியா விலும்,) இருக்கின்றார்'' என்று இன்னொரு பாட லில் பசாசு புலம்புகின்றது

புனித தோமையாரின் கல்லறை வெளிப் படுத்திய சான்றும் இக்கூற்றுக்கு ஆதாரமா யுள்ளது. கி. பி. 1523ல் போர்த்துக்கேயர் புனித தோமையாருடைய கல்லறையின் அடித்தளத்தை உறுதிப்படுத்தும்படி கல்ல றையைத் தோண்டியபோது, அதில் மண்டை ஓட்டுத் துண்டுகளையும், சில முதுகெலும்புகளை யும், ஒடிந்த மரக்கைப்பிடியுள்ள ஒலிவஇலை உருவத்தில் மலபார் இரும்பினால் செய்யப் பட்ட ஒரு ஈட்டியையும், சிவப்புமண் நிறைந்த ஒரு மண் குடத்தையும் கண்டெடுத்தனர். இக் கண்டுபிடிப்புகள் மலபாரிலுள்ள ''புனித தோமையாரின் கிறிஸ்தவர்கள்'' என்ற பழங் காலக் கிறிஸ்தவர்களுடைய புனித தோமை யாரின் அடக்கம் பற்றிய பரம்பரைக் கொள் கையை உறுதிப்படுத்தின. கண்டெடுத்த பொருட்கள் பரம்பரைக் கொள்கையோடு பொருந்தியிருந்தமையால் அவை உண்மை யாகவே புனித தோமையாரின் திருப்பண்டங் கள் என்ற முடிவுக்குப் போர்த்துக்கேயர் வந் தனர். ஆகவே, அவற்றைப் பத்திரப்படுத்தி,

[8ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## புளியந்தீவு

# புனித அந்தோனியார் தேவாலயம்.

எஸ். சவரிமுத்து.

ஒரு சமூகத்தினர் தங்கள் புராதன கலாச்சாரம், கலை, சிற்பம், சமயச் சின்னங்கள் என்பனவற்றின் வரலாறுகளை அறிந்திருப்பது, அவற்றைப் பேணிப்பாதுகாப்பதற்கு உதவியாயிருக்கும். இதற்காகவும், புனிதரின் பேரில் மேலும் மேலும் பக்தியை வளர்ப்பதற்காகவுமே இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

கி. பி. 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே போர்த்துக்கீசர் ஈழத்தின் கரையோரப்பகுதிகளை ஆட்சி புரிந்து வந்திருக்கின்றனர். அவர்களுடைய ஆட்சிக்காலத்திற்றான் கத்தோலிக்க சமயம் இங்கு பரவியது. வாணிபத்திற்காகவும், ஆட்சி செய்வதற்காகவும் வந்த போர்த்துக்கீசருடன் கத்தோலிக்க குருக்களும் இங்கு வந்தனர். அவர்களின் அயராத உழைப்பினாலும், தியாகமும் தூய்மையும் நிறைந்த வாழ்வினாலும் கத்தோலிக்க சமயம் மிகத் தீவிரமாய் பரவலாயிற்று. இயேசுவுக்காக தமது சுகபோகங்களைத் துறந்து இங்கு வந்த குருக்கள், மக்களின் பழக்கவழக்கங்களையும் பாரம்பரியங்களையும் பின்பற்றி,மக்களோடு மக்களாக வாழ்ந்தனர். அவர்களின் போதனை வழிவந்த சாதனையைக் கண்ட மக்கள் கத்தோலிக்க சமயத்தை உறுதியான விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டனர். போர்த்துக்கீசரின்பின் கரையோரப் பாகங்களையாண்ட டச்சுக்காரர் 100 வருடங்களுக்கு மேல் பல அடக்குமுறைச் சட்டங்களை உபயோகித்தும் கத்தோலிக்கரை இம்சைப்படுத்தியும், அவர்களின் மதப்பற்றை அழிக்க முடியவில்லையென வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். இக்கூற்றிலிருந்து போர்த்துக்கீசக் குருக்களின் வேத போதக பணி எவ்வளவு உன்னதமானதென விளங்குகின்றது.

போர்த்துக்கீசர் மேற்குக் கரையோரத்திலும் யாழ்ப்பாணத்திலுமே அதிகமாய்த் தங்கித் தங்கள் வாணிபத்தை விருத்தி செய்தனர். குருக்களும் அவர்களுடன் தங்கி மதப் பிரசாரம் செய்ததினால் அப்பகுதிகளில் அதிகமான மக்கள் கத்தோலிக்கராயினர். பிரயாண வசதிக் குறைவினால் சிறிது தாமதமாகவே கிழக்குப் பகுதியில் கத்தோலிக்க சமயம் பரவியது. கி. பி. 1628 தொடக்கம் போர்த்துக்கீச தேசாதிபதியாக இருந்த டீசா தனது அரசனின் உத்தரவுப்படி புளியந்தீவில் ஒரு கோட்டையைக் கட்டினானென அறியப்படுகிறது. ஆகவே, அக்காலத்திற்குச் சிறிது முன்னதாகவே போர்த்துக்கீசர் கிழக்குப் பகுதியில் கவனஞ் செலுத்தத் தொடங்கியிருப்பர். அவர்களுடன் குருக்களும் வந்து மக்களை மனந்திருப்பியிருப்பார்கள்.

புளியந்தீவிற் கோட்டை கட்டத் தொடங்கியபோதோ, அதற்கு முன்னரோ மட்டக்களப்புப் பகுதியில் போர்த்துக்கீசர் இருந்திருப்பர். தாங்கள் பிடித்த பட்டினங்களின் ஆட்சியைக் கவனிப்பதற்காக நிச்சயமாய் வந்திருப்பர். கோட்டை கட்டிய காலத்தில் அதிகமான போர்த்துக்கீசர் புளியந்தீவில் தங்கிச் சீவித்திருப்பார்கள். அவர்களுடன் மனந்திரும்பிய கத்தோலிக்கரும் இருந்திருப்பார்கள். அவர்களை விசாரிப்பதற்காகக் குருக்கள் காலத்துக்காலம் வந்திருப்பார்கள். இவர்கள் வழிபாடுகள் நடத்துவதற்காகத் தேவாலயங்கள் கட்டப்பட்டிருக்கும். அப்படிக் கட்டப்பட்ட தேவாலயங்களுள் எது முதலிற் மட்டக்களப்பிற் கட்டப்பட்டதெனத் திட்டமாய் அறியமுடியவில்லை. ஆனால், தாண்டவன்வெளித் தேவாலயமே முதலிற் கட்டப்பட்டதாகச் சில குறிப்புகள் காணப்படுகின்றன. கி. பி. 1711 வரையும் வேதபோதக அலுவலில் ஈடுபட்டு இலங்கை மக்களனைவர் மனதிலும் அழியாது இடம் பெற்றுள்ள வண. யோசேவாஸ் அடிகளார் தாண்டவன்வெளிக்கு வந்தபோது சமய விரோதிகளால் வம்மிமரமொன்றிற் கட்டியடிக்கப்பட்டதாக ஒரு கர்ண பரம்பரை வரலாறு இன்றும் மக்களிடையேயுண்டு. அடிகளார் தமது முதுமைப் பருவத்தில் தமக்குப்பின் வருவோர் கத்தோலிக்கரின் இருப்பிடங்களை அறிந்திருக்க வேண்டுமென்னுமாவலினால் இரு குருக்

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## புளியந்தீவு புனித அந்தோனி...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

களோடு கொட்டியாபுரத்திற்கு வந்திருக்கிறார். ஒருநாளிரவு அக்குருக்களில் ஒருவருக்குத் திடீரென ஏற்பட்ட வயிற்றுவலி காரணமாக அவர் இறந்துவிட்டார். அவரின் பூதவுடல் பழைய கோயிலிருந்த இடத்தில் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கிறது. இக்கல்லறையை இன்றும் காணலாம். இந்த உண்மை வரலாறு,அடிகளார் காலத்துக்குக்காலம் கிழக்குக் கரையோரத்திற்கு வந்திருக்கிறாரென்பதையும், அக்காலங்களில் மட்டக்களப்பிற்கும் வந்திருக்கக்கூடுமென்பதையும், அவ்விடம் தாண்டவன்வெளியாயிருக்குமென்பதையும், அதனோடு தொடர்பான பரம்பரை வரலாற்றையும் உறுதிப்படுத்துகின்றது. இதிலிருந்து தாண்டவன்வெளியிலுள்ள தேவாலயந்தான் மட்டக்களப்பின் மிக முந்திய தேவாலயமென்பதையும் ஊகிக்கக் கூடியதாக இருக்கிறது.

கி. பி. 1776ல் கத்தோலிக்கர் தேவாலயம் கட்டுவதற்கு இருந்த தடைகள் ஓரளவு தளர்த்தப்பட்டன. இக்காலத்திலிருந்துதான் மேற்குக் கரையோரத்திலும் யாழ்ப்பாணத்திலும் கிழக்குக் கரையோரத்திலும் தேவாலயங்கள் கட்டப்பட்டன. அக்காலத்தை அண்மித்தான் கி. பி. 1800ல் புளியந்தீவு புனித அந்தோனியாரின் தேவாலயம் கட்டப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. கத்தோலிக்கரின் தொகை கூடியதாலேயே இத்தேவாலயம் கட்டப்பட்டதெனக் கூறப்படுகிறது. அது ஓரளவு சிறிதான தேவாலயமாயிருந்திருக்க வேண்டும். பின்பு கி. பி. 1808 அளவில் அது பெருப்பிக்கப்பட்டது என்று ஊகிப்பதே உண்மையாகத் தோன்றுகின்றது.

இதே காலத்தில் இலங்கையிற் கட்டப்பட்ட தேவாலயங்கள் யாவும் பதிந்த முக்கோண வடிவக் கூரையுடையனவாகவே கட்டப்பட்டிருக்கின்றன. காலத்துக்காலம் இந்தியாவிலிருந்து கடல்வழியாகப் பிரயாணஞ் செய்து வந்த குருக்கள் கரையிலிறங்கியதும் தேவாலயங்களிற் தங்கக் கூடியதாக அக்காலத்திற் கட்டப்பட்ட தேவாலயங்கள் யாவும் நீர்நிலையங்களையடுத்து அப்பக்கமாகவே வாயில் வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. தன்னாமுனை, தாண்டவன்வெளி தேவாலயங்களின் பழைய முகப்புகளும், அமிர்தகழி, புளியடிக்குடா, சொறிக்கல்முனை, புளியந்தீவு புனித அந்தோனியார் தேவாலயமுகப்புகளும் இதற்குச் சான்று பகிர்கின்றன.

கி. பி. 1842 தொடக்கம் மட்டக்களப்புப் பகுதியில் வேதபோதக அலுவலில் ஈடுபட்டிருந்த வண. சுவக்கீம் கபிரியேல் சுவாமியாரால் இத்தேவாலயத்தின் இப்போதுள்ள முகப்புக் கட்டப்பட்டது. இதன்பின்னர் குருமாரால் இத்தேவாலயத்தில் எவ்வித திருத்தமும் செய்யப்பட்டதாக அறியவில்லை. ஒரு காலத்தில் ஏற்பட்ட ஏதோ ஒரு காரணத்தால் குருமார் இத்தேவாலயப் பராமரிப்பைக் கைநெகிழ்ந்து விட்டனர். ஆனால் கிறீஸ்தவ விசுவாசத்தில் உறுதிகொண்ட ஒரு சமூகத்தினர் தங்கள் புராதன சின்னத்தைக் காப்பதெனத் திடசங்கற்பங் கொண்டனர். இன்றுவரையும் அவர்களே இத்திருப்பணியைச் செய்துவருகின்றனர். இச்சமூகத்தினர் இப்பெரிய பொறுப்பை ஏற்று நடத்தியிராவிட்டால் மட்டக்களப்புக் கத்தோலிக்கரின் புராதன சின்னம் ஒரு வேளை சிதைக்கப்பட்டிருக்கக்கூடும். வருடத்தில் ஆறு மாதத்தில் நடைபெறவேண்டிய திருவழிபாடுகள் யாவும் இத்தேவாலயத்திலேயே நடைபெறவேண்டுமென்று ஒரு உடன்படிக்கை இருந்தது. ஆனால் சமீபகாலத்தில் இத்தேவாலயத்தில் நடைபெறவேண்டிய பல வழிபாடுகள் அடுத்த தேவாலயத்திற்கு மாற்றப்பட்டு வருகின்றன. இச்செய்கை இத்தேவாலயத்தைச் செயற்படாத நிலைமைக்குக் கொண்டுவந்துவிடுமோவென அஞ்சப்படுகிறது.

இத்தேவாலயத்தின் இருபக்க விறுந்தைகளும் இற்றைக்கு 75 வருடங்களுக்குமுன் இச்சமூகத்தினராலேயே கட்டப்பட்டன. இருகோபுரங்களும் திரு. லோறன்ஸ், திரு. விசுவாசம் என்பவர்களாற் கட்டப்பட்டன. ஆலயத்தில் ஒலிக்கும் மணிகள் திரு. லோறன்ஸ், திரு விசுவாசம், திருமதி விசுவாசமென்பவர்களின் அன்பளிப்புகளாகும். ஏறக்குறைய 30 வருடங்களின் முன் திரு விசுவாசம் என்பவரின் செலவில் தேவாலயக் கூரை முற்றாகத் திருத்தியமைக்கப்பெற்றுள்ளது. கம்பீரமாய் உயர்ந்து நிற்கும் கொடித்தம்பம் நாட்டாண்மைகுருசு என அறியப்படுவரால் ரேகுத் தொழிலாளரின் உதவியுடன் நிறுவப்பட்டது. பழுதடைந்த நிலையிலுள்ள மின்சார வசதியையும் திருத்தியமைத்தவர் திருமதி விசுவாசமவர்களே. மேற்கூறப்பட்டவைகளிலிருந்து இச்சமூகத்தினரே இப்புராதன சின்னத்தைப் பாதுகாத்து வருகின்றனரென்பது விளங்குகின்றது. பல வருடங்களின் முன் தேவாலயத்தைப் பாதுகாக்க ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அச்சங்கத்தின் முயற்சியால் சேர்க்கப்பட்ட பணத்திலேயே புதிய பீடமும்

(13ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வேதாகமத்தைப் படிப்போம்

அருட்திரு. R. S. லோப்பு அடிகள்.

## (4) இறைவெளிப்பாடு.

இறைவனைப் பற்றி அறிவது மனிதனுக்கு ஒரு பெரிய பிரச்சனையாக இருந்து வந்திருக்கின்றது. உலகத்தைப் படைத்த இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் நெடிய தூரம். இவர்களுக்கிடையில் எவ்வித தொடர்பும் இருக்கமுடியாது என்று ஒரு சாரார் கூறினர் (Deism). இறைவன் முற்றும் கடந்தவர் (Transcendent) என்ற கொள்கையை இவர்கள் கடைப்பிடிக்கின்றனர்.

இறைவனின் படைப்பு ஒரு விதத்தில் இறைவனின் வல்லமை. ஆதலின் இறைவனுக்கும் படைப்புக்குமிடையில் மிக நெருங்கிய தொடர்புண்டு. இறைவன் உலகத்தின் கண் அமிழ்ந்தியிருப்பதால், உலகத்திற்கும் மனிதனுக்கும் வெளியில் இறைவன் இருக்க முடியாது என்று இன்னொரு சாரார் கூறினர் (Pantheism). இறைவன் முற்றும் உள்ளிருப்பவர் (Immanent) என்ற கொள்கையை இவர்கள் கடைப்பிடிக்கின்றனர். இந்த இரு கொள்கைகளும் ஒன்றாகத் திரளுவதில்தான் இறை உண்மை, பெருமை, இரகசியம் (Mystery) தங்கியிருக்கின்றது.

மீட்பின் செய்தியைக் கேட்பதால், உலகம் முழுவதும் விசுவசிக்கவும், விசுவசிப்பதனால் நம்பிக்கை கொள்ளவும், நம்புவதால் அன்பு செய்யவும் முடியுமென்ற நோக்குடன் திரிதேந்தீன், முதலாம் வத்திக்கான் சங்கங்களைப் பின்பற்றி, இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கமும் இறைவெளிப்பாடு பற்றிய உண்மையான போதனையை எடுத்துரைக்கின்றது.

நன்மையும் ஞானமும் நிறைந்த இறைவன், மனிதரை எதிர்கொண்டு, மனிதருக்குத் தம்மைத்தாமே வெளிப்படுத்தவும், தமது திருவுளத்தின் மறைத்திட்டத்தை வெளியிடவும் விரும்பினர் (எபே. 1, 9–10). இத்திட்டத்தால், மனுவுரு எடுத்த இறை வார்த்தையான கிறீஸ்துவின் மூலம் பரிசுத்த ஆவியின் வழியாக மனிதன் இறைத் தந்தையை நெருங்குகின்றான். இறை இயல்பில் பங்கு கொள்ளுகின்றான் (எபே. 2, 18: 2 இரா 1, 4).

மீட்பின் வரலாற்றில் இறைவன் ஆற்றிய செயல்கள், அவருடைய வார்த்தையை வெளிப்படுத்தி, உறுதிப்படுத்துகின்றன. மீட்பின் வாக்குறுதியையும், நம்பிக்கையையும், பாவத்தில் வீழ்ந்த ஆதித்தாய் தந்தையருக்கு இறைவன் முதலில் அளித்தார். ஆபிரகாமை அழைத்து, இவர்மூலம் இஸ்ருயேல் மக்களைத் தோற்றுவித்து, இவர்கள் வழியாக உலக இரட்சணியத்தைக் கொண்டு வந்தார். மோயீசன் தலைமையில் இஸ்ருயேல் மக்களை மீட்டுக் கொண்டு வந்து, இறைவாக்கினர் வழியாக அவர்களை வழிநடத்திச் சென்றார். கிறீஸ்துவின் காலத்துக்கு முன்னதாக இந்த இரட்சணிய திட்டம் எவ்வாறு செயல்படுத்தப் பட்டது என்பதின் குறிப்புகள் பழைய ஏற்பாட்டில் காணக்கிடக்கின்றன.

பல்வேறு வழிகளில் இறைவாக்கினர் வழியாகப் பேசிய பின் இறைவன் "நாம் வாழும் இவ்விறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாகவே பேசியுள்ளார்" (எபி. 1, 2). இயேசுவைக் காண்பது அவரின் தந்தையைக் காண்பதாகும் (அரு. 14, 9). இக்காரணத்தினால்தான் இயேசு தம் சொல், செயல், அருங்குறிகள், புதுமைகள், குறிப்பாகத் தம் இறப்பு, இறந்தோரினின்று தம் மாட்சிமிகு உயிர்ப்பு, இறுதியாக உண்மையின் ஆவியானவரை அனுப்புதல் ஆகியவற்றினால் இறைவெளிப்பாட்டை முழுமைப் படுத்துகின்றார்.

இவ்வாறு, இறைவன் வரலாறு வழியாகத் தம்மையும் தமது மீட்புத் திட்டத்தையும் மனிதருக்கு வெளிப்படுத்தியுள்ளார். இவ்வெளிப்பாட்டின் மையமும் உச்சியும் இறைமகனும் மீட்பருமாகிய கிறிஸ்துவே "மீட்பின் வரலாற்றில் இறைவன் ஆற்றிய செயல்

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவன் அளித்த பதில் (2)

இப்போது சாந்தனுக்குள்ள ஒரே பிரச்சினை தன் உயிருக்குயிரான தங்கையை கரை சேர்ப்பது. சீதனம் என்னும் அரக்கன் இளைஞர்கள் மண்டைகளில் நின்று பேயாட்டம் ஆடும் இந்தக் காலத்தில், ஓர் ஏழைப் பெண்ணைக் கரை சேர்ப்பதென்றால் சுலபமான காரியமா? இது சாந்தியின் நல்வாழ்வுக்கு ஒரு பெரும் முட்டுக் கட்டையாக இருந்தது. இதற்காக சாந்தன் எந்தக் குறுக்கு வழியையும் நாடவில்லை. தன் உடலில் கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரையில் தன் தங்கையை வாழவைத்தேயாவதென்று சங்கற்பம் பூண்டு கொண்டான். அல்லும் பகலும் ஓயாது உழைத்தான் தங்கைக்காக. தன் வாழ்வுக்காக அண்ணா மட்டும் இரத்தமும் வியர்வையும் சிந்திப் பாடுபடும் போது அதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க எந்த நல்ல தங்கைதான் விரும்புவாள். சாந்தியும் உழைக்க ஆரம்பித்து விட்டாள். அவள்தான் படித்த பெண்ணாயிற்றே. ஊரில் ஓர் நல்ல கௌரவமான குடும்பத்தில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தாள். அவளுக்குத் தன் முயற்சி சுமாரான வருவாயைக் கொடுத்துக் கொண்டிருந்தது. சாந்தியின் நேர்மையையும் திறமையையும் கண்ட அக் குடும்பத்தவர்கள் அவளை வெகுவாக நேசித்தனர். அதே போல் அக் குழந்தைகளும் சாந்தி மேல் உயிரையே வைத்திருந்தன. தன்னை நேசிப்போரைச் சோதிப்பதுதானே இறைவனின் வழக்கம்.

சாந்தன், சாந்தி, சகோதர வாழ்வில் கடைசி முறையாக கடவுள் தன் சோதனையை ஆரம்பித்திருந்தார். அன்றொருநாள் சாந்தன் தன் கூலியாட்களுடன் தானுமாக நின்று,

**A. நெல்சன்,**
தியாவட்டவான், வாழைச்சேனை.

விளைந்துவிட்ட தன் வயலை அறுவடை செய்துவிட்டு தனக்கு என்றுமில்லாதவாறு இம்முறை கடவுள் கொடுத்திருந்த அசல் விளைச்சலை எண்ணி மனம் பூரித்தவாறு, எப்படியும் இம் முறை தன் தங்கையின் திருமணத்தை சிறப்பாக நடத்திவிடுவதென கோட்டை கட்டிக் கொண்டு வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான். சாந்தி அன்றுமாலை வழக்கம்போல் பாடம் சொல்லிக் கொடுக்கச் சென்றிருந்தாள். ஆனால், அவ்வீட்டார் ஒன்றும் சொல்லாமல் உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளச் சென்றிருந்தனர். வீட்டிற்குக் காவலாக அவர்களது மூத்த மகன் மட்டும் இருந்தான். கௌரவமான குடும்பத்தில் பிறந்திருந்தாலும் கல்லூரிப் படிப்பும் பெண்களை வெறும் காமப் பொருளாக மாத்திரம் கருதும் சில தீய நண்பர்களது சிநேகமும் அவன் மனதிலும் தீய சிந்தனைகளை வளர்த்திருந்ததில் வியப்பில்லை. அதற்கேற்றவாறு அவனது அப்போதைய தனிமையான நிலை மேலும் எரிகிற நெருப்பில் எண்ணெய்யை வார்பதுபோல் சிந்தனையை கிளறிவிட்டுக் கொண்டிருந்தது. கள்ளம் கபடமறியாத சாந்தி வழமைபோல் வீட்டினுள் நுழைந்தாள். வீட்டினுள் ராஜு மட்டும் தனிமையாக அமர்ந்து இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தபோதும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ராஜுவிடம் வீட்டாரைப்பற்றி அறிந்து கொண்டு மெல்ல நழுவிவிட முயன்ற சாந்தியைத் தடுத்து நிறுத்தினான் ராஜு. அவன்தான் ஏற்கெனவே தீய சிந்தனையில் ஊறிக்கிடந்தவனாச்சே. சாந்தியின் நிலை வேடன் விரித்த வலையில் சிக்கிய மான்போல் ஆகிவிட்டது. ராஜு தந்திரமாக அவளை வயப்படுத்திக் கொள்ள முயன்றான். சாந்தியோ அவனது தீய எண்ணத்துக்கு இடங்கொடுக்க கண்டிப்பாக மறுத்துவிட்டாள். ஆனால், அவளால் வெளியில் செல்ல முடியாதபடி கதவு பூட்டப்பட்டுவிட்டதே. அவள் ராஜுவிடம் கெஞ்சினாள் மன்றாடினாள். ''அண்ணா, என் உயிரை வேண்டுமானாலும் எடுத்துக்கொள். ஆனால் என் கற்புக்கு மட்டும் களங்கம் ஏற்படுத்திவிடாதே'' என்று அவனது இரு கால்களையும் பற்றிக்கொண்டு அழுதாள். கற்பின் மகத்துவத்தை, அதன் புனிதத் தன்மையை அறியும் சக்தியற்றிருந்த அந்தப் பசாசு அவளைப் பலவந்தமாகக் கெடுத்துவிட்டது. மயக்கம் தெளிந்து கண் விழித்தபோது உலகமே இருட்டிவிட்டது போன்றதோர் பிரமை அவளைப் பற்றிக் கொண்டது. அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக அலங்கோலமான நிலையில் விசர்பிடித்தவள் போல் ஓடினாள் வீட்டை நோக்கி. அவள்

[8ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இறைவன் அளித்த...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

போய் வீட்டை அடையவும் சாந்தன் வயலிலிருந்துவந்து சைக்கிளால் இறங்கவும் சரியாயிருந்தது. தங்கையின் கோலத்தைக் கண்ட அவன் அதிர்ச்சியடைந்து சிலைபோல் நின்றுவிட்டான். கோவென்றலறிக்கொண்டு அவன் கால்களில் விழுந்தாள் சாந்தி. தாத்தாவுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாத துர்ப்பாக்கியசாலியாகிவிட்டேனே. ''ராஜு என்னைக் களங்கப்படுத்தி விட்டான், அண்ணு,'' என்று சாந்தி சொன்னதுதான் தாமதம், வெறிபிடித்தவனைபபோல் கத்திக் கொண்டு அந்தக் கயவனைப் பழிக்குப்பழி வாங்க ஓடினுன் சாந்தன். கோயிலைக் கடந்து செல்லும் ஒவ்வொரு வேளையும் கோயிலுள் சென்று செபம் செய்யாமல் அடியெடுத்து வைக்காதவன் சாந்தன். ஆனுல் இன்று கோயிலையும் கவனியாது ஓட முற்பட்டான். கோயிலின் முன்னுல் வீதியில் கிடந்த கல்லில் இடறுண்டு விழுந்தவன் எழுந்திருக்கமுயலுமுன் கோயிலில் முன்னெருநாள் கேட்ட சுவிசேஷ வாக்கியம் நினைவுக்கு வந்தது.

''கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானே உங்களுக்குச் சொல்லுகிறேன். தீயோனை எதிர்க்க வேண்டாம். யாராவது உன் வலக் கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தையும் காட்டு .... உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள்'' இந்த வார்த்தைகளை நினைவுகூர்ந்த சாந்தன் சிறிது சிந்தித்தான்: ராஜுவைப் பழிவாங்குவதால் தனக்குக் கிடைக்கும் நன்மைதான் என்ன? தான் தூக்குக் கயிற்றை முத்தமிட சாந்தி உலகில் தனியே நின்று தத்தளிப்பது தான் என்றெண்ணிய அவன், ராஜுவின் மனதை மாற்றி எப்படியாவது அவனையே தங்கைக்கு மணமுடித்து வைப்பதென்ற முடிவுடன் கோயிலுள் சென்று தன் முயற்சிக்கு ஒரு நல்ல முடிவைத் தருமாறு நற்கருணை நாதரிடம் உருக்கமாக மன்ருடிவிட்டு, ராஜுவின் வீட்டை நோக்கி நடந்தான். கருணையுள்ள கடவுள் ராஜுவின் மனதை உடனடியாக மாற்றிவிட்டிருந்தார். தான் அந்த உத்தமிக்கு இழைத்துவிட்ட பெரும் துரோகத்துக்காக மனமுருகி அழுதுகொண்டிருந்தான். சாந்தன் தன்னைத் தேடிவந்து விட்டதைக்கண்டவன் ஓடிச் சென்று சாந்தனின் கால்களில் விழுந்து மன்னிப்புக்கோரி தான் இழைத்துவிட்ட தவறுக்காகத் தானே சாந்தியைக் கைப்பிடிப்பதாகவும் உறுதியளித்தான். மறுவாரமே அவனது பெற்றேரின் ஆசீர்வாதத்துடன் ராஜு சாந்தியையும், சாந்தன் ராஜுவின் தங்கை கலாவையும் தேவாலயத்தில் கைப்பிடித்தனர். சாந்தனுக்கோ தன் தங்கையை ஒரு பெரிய நல்ல குடும்பத்தில் சேர்த்துவிட்டதில் மட்டற்ற மகிழ்ச்சி. சாந்தனின் நேர்மைக்கு அவனைத் தூற்றித் திரிந்த பல இளைஞர்களுக்கு இறைவன் அளித்த பதில் அவர்களைத் திகைக்க வைத்தது.

(யாவும் கற்பனை)

---

## அப்போஸ்தலரான...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கோவா நகருக்குக் கொண்டு சென்று புனித தோமையாரின் பெயர்கொண்ட ஒரு ஆலயத்தில் மக்களின் வணக்கத்திற்கெனப் பூச்சியமாய் வைத்துப் பாதுகாத்தனர்.

இன்று மயிலாப்பூரிலுள்ள பேராலயத்தில் புனித தோமையாரின் எலும்பு ஒன்றும், அவரைக் கொன்ற ஈட்டி முனையும் திருப்பண்டங்களாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவைகளை திருயாத்திரிகர்களும் பொதுமக்களும் கண்டு கொள்ளலாம்.

கி. பி. 13ம் நூற்றுண்டில் புனித தோமையாரின் கல்லறையைத் தரிசித்த **மார்க்கோ பேரலோ** என்ற இத்தாலிய யாத்திரிகர் புனித தோமையாரின் திருக் கல்லறையில் மக்கள் வைத்திருந்த ஆழ்ந்த நம்பிக்கையைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''இப் புனித இடத்திற்கு திருயாத்திரையாக வரும் கிறிஸ்தவர்கள் புனிதர் கொல்லப்பட்ட இடத்திலிருந்து மண் எடுத்துச்சென்று நோயாளிகளுக்கு அளிக்கின்றனர்; இறைவனின் வல்லமையாலும் புனித தோமையாரின் சக்தியாலும் நோயுற்றவர்கள் உடனே குணமடைகிருர்கள்.'' கி. பி. 14ம் நூற்றுண்டில் புனித தோமையாரின் கல்லறையைத் தரிசித்த **ஜோன்தேமரிஞ்ஞால்லி** ஆண்டகையும் அவ்வாறே கூறுகின்ருர். ''இந்த மண்ணை உட்கொண்டதும் நோய்கள் குணமடைகின்றன. இவ்விதம் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர் அல்லாதோர் மத்தியில் பகிரங்கமாய்ப் புதுமைகள் நிகழ்கின்றன''. நம் அப்போஸ்தலரின் கல்லறையில் இருந்து மண் எடுக்கும் வழக்கம் பல நூற்றுண்டுகளாகத் தொடர்ந்து இன்றுவரை நிகழ்ந்து வருகின்றது. (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# பாலர் படையெடுப்பு

எங்கும் சனத்திரள்; ஆணும், பெண்ணும், பிள்ளையும், குட்டியும் முட்டி அடித்து நான் முந்தி, நீ முந்தி. என்ன விசேஷம்? தெரியாதா? ''காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதானே''. தனது குழந்தை மேல் அவர் கைபடவேண்டும். ஆசீர்வதிக்க வேண்டும். அதுதான் காரணம். ஆனால் அதற்கிடையில் ஏதோ தாறு மாறு. பரிசேயரின் குழப்பம், புருஷன் மனைவியைப் பற்றிய வாக்குவாதம். அவர்களுக்குத் தம் வாக்கு வல்லமையால் சாட்டை அடி கொடுத்த பின் அவர் கொஞ்சமும் இளைப்பாறவில்லை. பெண்களைத் தெரியாதா? அவர் மனமும் உடலும் சலித்துப்போயிருக்கும் வேளைகூட விட்டுக்கொடுத்தார்களா? அவர் கைவைத்து ஆசீர்வதிக்கும்படி அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்.

புத்தியில்லாப் பெண்கள், இவர்களுக்கு நேரகாலம் கிடையாது. சொந்த நலம்தான் எப்போதும். அவருக்கு ஓய்வு வேண்டாமா? போதித்தார், நோயாளிகளைக் குணப்படுத்தினார். பேய்களை ஓட்டினார், இப்போதுகூட முக்கிய காரியங்களைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறார். பெண்கள் இப்படித்தான். இவ்வாறு சீஷர்கள் அவர்களை அதட்டி விரட்டினார்கள். இந்த ஆண்களுக்கு ஈவு இரக்கம், அன்பே கிடையாது. இப்படியா பச்சைப் பாலகர்களை, சின்னஞ் சிறுவரை அதட்டுவது? பிள்ளைகள் திகிலடைந்தால்? தாய்மாருக்குத் தான் பிள்ளைகளின் அருமை தெரியும். இந்த முரடுகளுக்கு என்ன தெரியும் என்பது தாய்ப்பாசத்தின் ஓலம்.

இவர்களின் எண்ணச் சுழலை அவர் அறிகிறார். அவர் ஆண்தான், ஆனால் முரடர் அல்லர். குழந்தைகள் மேல் கொண்ட அன்பினால் இதயம் விம்முகிறது, முகம் மலர்கிறது, புன்னகை பூக்கிறது. அச்சிறுவர்களை நோக்குகிறார். ''குழந்தைகளை என்னிடம் வர விடுங்கள்; தடுக்கவேண்டாம், ஏனெனில் கடவுளின் அரசு இத்தகையோரதே''. சீஷர்களுக்கு ஒரு கண்டிப்பு; எதிர்பாராதது. உடனே ஒரு பரபரப்பு. பாலர்களின் படையெடுப்பு; தாய்மாரும் பிள்ளைகளும் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். எல்லார் முகத்திலும் இன்பம் ஒளிர்கிறது.

இதோ ஒரு குழந்தை அவர் உடையைத் தொட்டுத் தொட்டு ஆராய்ச்சி செய்கிறது, மற்றொரு குழந்தை அவரின் நீண்ட தலைமயிரின் அழகைப் பிடித்துப்பார்க்கிறது, இன்னொன்று அவர் கையைப்பிடித்து ஆட்டுகிறது, வேறொன்று தன் தலையை அவர் மடியில் வைத்து தாயைக் கம்பீரத்துடன் பார்க்கிறது, பின்னொன்று தன் பொக்கை வாயைக் காட்டிச் சிரிக்கிறது, அங்கே ஒன்று எட்டி நின்று ஒற்றைக் கண்ணால் நோட்டம் விடுகிறது, அடுத்தொன்று தவண்டு தவண்டு ஏறப் பார்க்கிறது. என்ன இன்பக் காட்சி, என்ன அன்புக் காட்சி, இவ்வாறு சிசுக்களோடு சிசுவாய் மெய்மறந்து, முகம் மலர்ந்து அவர்கள் நடுவில் இருக்கும் இவர்தானா கயிற்றினால் கசை செய்து ஆலயத்துக் கடைக்காரர்

[10ம் பக்கம் பார்க்கவும்]

**சகோ. எம். லில்லியோசா,** ஏ. சி.
புனித ஊர்சுலா மடம், பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மகளிர் மன்றம்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

களை அடித்துத் துரத்தியவர்? இவர்தானு விபசாரப் பெண்ணை விடுதலை செய்து பரிசேயரை மண்டியிடச் செய்தவர்? ஆம் அவரே சிறுவர்களை அழைக்கிருர். அரவணைக்கிருர். அவர்கள் மத்தியில் இன்புற்றிருக்கிருர். விளையாடுகிருர். சிசுக்கள் உள்ளம் கொண்ட அவர் சிசுக்களோடு சிசுவைப்போல் காட்சி அளிப்பதில் என்ன வியப்பு இருக்கிறது. அவர்களை அரவணைத்து, அவர்கள்மேல் தமது கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார்.

சிறுவர்களின் பெரியார் அவர். சிறுவர்களைக் காக்க வந்த காப்பாளர். சிறுவர்களை என்னிடத்தில் வரத் தடை செய்யாதீர்கள் என்ருர். மோட்ச இராட்சியமே அப்படிப்பட்டவர்களுடையதே என்று கூடக் கூறி சிறுவர்களை உயர்த்திவிட்டார். ஆனுல் இன்று எத்தனை தாய்மார் தம் அன்புக் கனிகளை அவரிடம் அழைத்துச் செல்கின்றனர்? பேதைப் பெண்கள், திருமணத்தின் அன்புக் கனிகள் குழந்தைகள் என்கின்ருர் அவர். ஆனுல் இவர்கள் இல்வாழ்க்கையின் குறிக்கோள் இன்பம் மட்டுமே என்கின்றனர். குழந்தைகள் தமக்குப் பெருஞ்சுமையென்று கருத்தடை செய்து கடவுளுக்கு அடுக்காத அக்கிரமங்களைப் புரிந்து, இல்லறத்தின் இன்ப வாழ்வைக் கெடுக்கின்றனர். குழந்தையின் மழலை மொழிக்கு இணையாகுமா யாழின்ஒலி? ஆகவே குழந்தைகளின் தலைவரான இயேசுவிடம் எம் குழந்தைகளைக் கொண்டுசென்று அவரின் திருக்கர ஆசிவேண்டி, அவரிடம் அவர்களை ஒப்பித்து, அவரைப்போல வாழ இறைவனை வேண்டுவோமாக.

வாழ்க நம் சிறுவர்.

## லூர்து மாதாவின்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு கெபி அமைத்து அன்னையின் அழகிய சுரூபத்தை அதில் ஸ்தாபித்தனர்.

இதைத் தொடர்ந்து இயேசு சபையைச் சார்ந்த குருவானவர்களின் பெரும் பாடுகளினுலும், மற்றும் கிறிஸ்தவர்களின் உதவியாலும், கிறிஸ்தவரல்லாதவரின் உதவியாலும் மாதாவின் இடம் பொலிவுற்றது. திருகோணமலையிலிருந்து கத்தோலிக்க மக்கள் கூட்டம் கூட்டமாக நடந்து சென்று அவ்விடத்தைச் சேர்ந்து, பக்தியுடன் அன்னையைத் தரிசிப்பது வழக்கம். அதுமட்டுமல்லாமல் பக்திப்பரவசமாய் செபமாலை செபித்தும், பக்திப்பாடல்கள் இசைத்தும் அன்னையை மன்ருடி வந்தார்கள். நாளுக்கு நாள் அன்னையின் புகழ் பரவத் தொடங்கிற்று. வருடா வருடம் அன்னைக்கென விசேட திருநாள் ஒன்று செய்து வந்தார்கள். பலபாகங்களிலிருந்தும் கிறிஸ்தவர்கள் வந்து அன்னையின் அருளைப் பெற்றுப்போனுர்கள். அன்னையின் அருளால் எத்தனையோ புதுமைகள் நடந்துள்ளன.

அன்றைய நிலையிலும் பார்க்க இன்றைய நிலையில் புனித லூர்து அன்னையின் இடம் பொலிவுற்று பூத்துக் குழுங்கும் பூங்காவனம் போல் காட்சியளிக்கின்றது. கோவிலுக்குப் போகும் இரு மரங்கிலும் மக்கள் குடியிருக்கிருர்கள். அது மட்டுமா, சின்னக்கடைப் பங்கின் கீழிருந்து வந்த இடம் தற்போது தனக்கென ஒரு பங்கை நிலைநாட்டி மிகவும் சிறப்பாக இயங்கி வருகின்றது. இங்கே ஞாயிற்றுக்கிழமை தோறும், பூசைப்பலியும், சிறுவர்களுக்கென மறைக்கல்வியும் போதிக்கப்படுகின்றது. மற்றும் கடன் திருநாட்களில் பூசையும், ஆராதனையும் நடைபெறும். லூர்து அன்னையின் திருநாள் வைகாசி மாத முடிவில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. திருநாளன்று பல மதத்தவரும் அங்கு மாதாவின் அருள் நாடி வருவர். தஞ்சமென்ருேடிவரும் பக்தர்களின் துயர் தீர்க்கும் இடமாக விளங்கி வருகின்றது அன்னையின் திருப்பதி. ❋

## இறைவழிபாட்டுச்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

8. விசேஷ இறுதி ஆசீர்:- பூசை முடிவில் வழமையாய் அருளப்படும் ஆசீருக்குப் பதிலாக உறுதிப்பூசுதல் பெற்றவர்களுக்கும், அவர்கள் பெற்ருேர், ஞானப்பெற்ருேர், உறவினர், திருச்சடங்கில் பங்குபற்றிய கிறிஸ்தவ மக்கள் எல்லாருக்கும் விசேஷ இறுதி ஆசீர் அளிக்கப்படுகின்றது.

திவ்விய பூசையின்றி உறுதிப்பூசுதல் அளிக்கப்படும்போது பின்வரும் ஒழுங்குமுறை அனுசரிக்கப்படும்: 1. நுழைவு, 2 இறைவார்த்தை வழிபாடு, 3. ஆயரின் அருளுரை, 4. ஞானஸ்நான வாக்குறுதிகளைப் புதுப்பித்தல், 5. கைகளை விரிக்கும் சடங்கு, 6. பரிமள தைலத்தால் பூசுதல், 7. விசுவாசிகளின் விசேஷ மன்ருட்டு, 8. ஆண்டவர் கற்பித்த செபம், 9. விசேஷ இறுதி ஆசீர். ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முன்னோடி

எவ். எஸ். திரும(லை) ரூபன்.

குதூகலம் நிறைந்த ரம்மியமான காலை வேளை. இறைவன் ஏற்படுத்திய இயற்கை அமைவுகளின் ஆரம்பத் தோற்றம் பனிமயமான அந்த வேளைக்கு மேலும் ஒருபடி மெருகேற்றிக் கொண்டிருக்கின்றது. அந்த இன்ப வேளையை எமக்களித்த இறைவனுக்கு நாம் என்ன கைமாறு செய்யப்போகிறோம்?

அதோ சக்கரியாஸ் என்றழைக்கப்படும் வயோதிபர் வருகிறார். வழக்கமாக அவர் நடையில் காணப்படும் சோர்வுக்குப் பதிலாக இன்று கெம்பீரம் காணப்படுகிறது. ஒரு நாளுமில்லாத திருநாளாக அவர் முகம் அளவற்ற ஆனந்தமயமாயிருக்கிறது.

அதோ சற்றுத் தூரத்தில் தெரிகிறதே அந்த ஆலயம் அதை நோக்கியே அவரது கால்கள் வீறுநடை போடுகின்றன. இறைவனின் ஆசியும் அன்பும் அவரது இதயத்தை நிரப்பிக் கொண்டிருந்தபோதும், தனக்குப் பின் இறைமைப் பணியை மேற்கொள்ள ஒரு குழந்தை இல்லையேஎன்று அவர் ஒரு காலத்தில் ஏங்கிக் கொண்டிருந்ததும் உண்டு. இப்போது அந்த ஏக்கம் தூக்கமடைந்து விட்டது என்பதல்ல. உடலில் வாலிப முறுக்குக் குறைந்து வயோதிபப் பராயத்தை எட்டிவிட்ட தனக்கு குழந்தைப் பேறு கிட்டாத ஒன்று என்றதனாலேயே அந்த ஏக்கம் இப்போது அவர் மனதில் தலைகாட்டுவதேயில்லை. காலம் முழுவதும் ஆலயத்தில் இறைமைப் பணியே எனது பணி என்ற அவரது தீர்மானம் செயல்படும் அபூர்வ நாட்களில் ஒன்றாக இன்றையப் பொழுது மலர்ந்திருப்பதே அவரது கெம்பீரத்திற்குக் காரணம்!

அதிஷ்டச் சீட்டு குலுக்கிப் பார்த்ததில், இன்று இறைவனுக்குத் தூபம் காட்டி தொழுதேற்றும் பேறு அவர் பெயருக்குக் கிடைத்திருப்பதே அவரது அளவற்ற ஆனந்தத்திற்குக் காரணம்!

ஆலயத்தின் உள்ளும் புறமும் எண்ணற்ற பக்தர்கள் செபிப்பதிலும், இறைவனின் அருட் கொடைகளைப் போற்றுவதிலும் தங்கள் நிலை மறந்திருந்தனர். அலங்கரிக்கப்பட்ட அந்த எளிமையான பீடத்தில், அக்களிப்பும் ஆனந்தமும் நிறைந்த இதயத்தோடு சக்கரியாஸ் தூபத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார். நறுமணப் புகை, பீடத்தை மறைத்து ஆலயத்தில் இறைமணத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. மண்டிய புகை மண்டபத்தின் நடுவே, பீடத்தின் வலப்புறம் திடிரென ஒளிமயமாகிறது, மென்மையும் வெண்மையும் கொண்ட இறைதூதன் ஒருவனை அந்த ஒளியின் மத்தியில் கண்டதும் சக்கரியாஸ் கலங்கிப் போனார். அச்சம் அவரையறியாமலே பற்றிக் கொண்டது. தன் நிலை மறந்தார்.

''சக்காரியாஸ்! அஞ்ச வேண்டாம்! உமது வேண்டுகோள் நிறைவேற்றப்படுகிறது உமது மனைவியாகிய எலிசபேத் அம்மாள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவனுக்கு அருளப்பன் என்று நாமத்தைச் சூட்டுவீர். இதனால் உமக்கு மட்டுமல்ல உலகம் முழுவதற்குமே மகிழ்ச்சி உண்டாகும். மதுவை மனதாலும் தீண்டாத அவன், தாயின் வயிற்றிலிருக்கும் போதே தூய ஆவியினால் நிரப்பப்படுவான் இஸ்ரேயல் மக்களில் அநேகரை தேவனின் புத்திரர் ஆக்குவான். ஆண்டவருக்கு ஏற்றவாறு மக்களை மனந்திருப்புவதற்கு எலியாசின் ஞானத்தையும் வல்லமையையும் கொண்டிருப்பான்''

இறைதூதனின் வார்த்தைகளைக் கேட்டவுடன் சக்கரியாஸின் நிலை மேலும் குழப்பமாகியது மனதில் ஏற்பட்ட சலனத்தை கேட்டார்.

''நானோ வயோதிபத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறேன். இந்த நிலையில்...........''

''நான் ஆண்டவனின் தூதன் கபிரியேல். என்னால் சொல்லப்பட்ட இறைவனின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாது சந்தேகப்பட்டதனால், உனக்குக் குமாரன் பிறக்கும் வரை ஊமையாய் இருப்பாய்''. தூதன் மறைந்து

(13ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இங்கினியாக்கலையிலே........

சென்ற 13-5-72ல் கல்லோயாப் பள்ளத்தாக்கின் இங்கினியாக்கலையில் உள்ள பாத்திமா அன்னையின் சேத்திரத்தில், பரிசுத்த தந்தை 12ம் பத்திநாதர் 1946ல் அன்னைமரியாளை உலகின் அரசியெனப் பிரகடனப்படுத்தி முடிசூட்டிய உன்னத நிகழ்ச்சியின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் நடைபெற்றது.

தற்பொழுது இலங்கையில், பரிசுத்த தந்தையின் பிரதிநிதியாக உள்ள மாகா வந்தனைக்குரிய கார்லோ கூரிஸ் ஆண்டகையவர்கள் இவ்வெள்ளிவிழாக் கொண்டாட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் குருக்களுடனும் சந்நியாச சகோதரர்கள், கன்னியர்களுடனும் இவ்வைபவத்திற் கலந்து கொண்டனர்.

எமது துணை ஆயர் வந்தனைக்குரிய வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் சேத்திரவாயிலில் வைத்து சேத்திரத்திற்கெனப் பாத்திமா அன்னையின் அகில உலக தொண்டர் படையினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட சுரூபம் ஒன்றை சேத்திரப்பரிபாலகர் அருட்திரு கார்லோ பெரேரா அடிகளிடம் கையளித்தார். அதைத் தொடர்ந்து பாத்திமா அன்னையின் சொரூபம் பவனியாகச் சேத்திரத்தினுள் எடுத்துச்செல்லப்பட்டது. அங்கே குத்துவிளக்கேற்றி சுதந்திரக் கொடிதனை நாட்டிப் பாப்பரசரின் பிரதிநிதியவர்கள் வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து, நம் நாட்டின் சார்பிலும், திருமலை - மட்டுநகர் மறைமாவட்டத்தின் சார்பிலும், கூடியிருந்த மக்கள் சார்பிலும் பரிசுத்த தந்தையின் பிரதிநிதியவர்களுக்கு ஒரு வரவேற்பு உபசாரம் நடாத்தப்பட்டது.

அவ்வேளையில், சேத்திரப் பரிபாலகர் பின்வருமாறு கூறினார்: ''பாத்திமா அன்னையின் இப்புனித தலம் 1966ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சேத்திரத்தைத் தற்போதய நிலைக்குக் கொண்டுவர நாம் எண்ணற்ற இடைஞ்சல்கள் அனுபவிக்கவேண்டியிருந்தது. இச்சேத்திரத்திற்கென இவ்விடத்தை எமக்களித்த அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும், இங்கு வாழும் கத்தோலிக்கரல்லாத மக்கள் காட்டிய பரிவன்பிற்கும், இச்சேத்திரத்திற்குத் தாராள மனதுடன் துணைகள் பல புரிந்துள்ள, புரிந்துகொண்டே வருகின்ற பாத்திமா அன்னையின் பக்தர்கள், நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் நமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்''

அருட்திரு தந்தையர் 25 பேரும், துணையாயர் அவர்களும், பாப்பரசரின் பிரதிநிதியுடன் சேர்ந்து கூட்டுப் பலியினை நிறைவேற்றினர். அவ்வமயம் துணையாயர் பாத்திமா நிகழ்ச்சியின் உண்மைக் கருத்தை விளக்கி ஒரு சிறு மறையுரை ஆற்றினார்.

பூசைப்பலியின் இறுதியில், பரிசுத்த தந்தையின் பிரதிநிதியவர்கள் பாத்திமா அன்னையின் சுரூபத்திற்கு முடிசூட்டியபின், அகில உலகமும், ஈழநாடும் அன்னை மரியாளுக்குக் காணிக்கையாக்கும் செபம் மும்மொழியிலும் வாசிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பாத்திமாவின் செய்தியினைப் பரப்ப பாத்திமா அன்னையின் நீலநிறத் தொண்டர் படையின் கிளை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இறுதியில் சேத்திரத்தைச் சுற்றி அன்னையின் திருச்சுரூபம் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு, சுரூப ஆசீர்வாதத்துடன் வெள்ளி விழா வைபவம் இனிது முடிவடைந்தது.

## வேதாகமத்தைப்...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

கள் மறைக்கோட்பாடுகளையும், அவருடைய சொற்கள் குறித்துக்காட்டும் உண்மைகளையும் வெளிப்படுத்தி, உறுதிப்படுத்துகின்றன. அதே வேளையில் அவருடைய சொற்கள் அவருடைய செயல்களைப் பறைசாற்றி, அவற்றில் அடங்கியுள்ள மறைபொருளை விளக்குகின்றன'' என்று 2ம் வத்திக்கான் பொதுச் சங்கம் விளக்கம் தருகின்றது (இறைவெளிப்பாடு இ. 2).

இறைவெளிப்பாட்டிற்கு மனிதன் அளிக்கும் பதில், விசுவாசம். விசுவாசத்தால் மனிதன் இரட்சணியத்தின் ஒரே நம்பிக்கையான கடவுளுக்குத் தன் அறிவையும், சித்தத்தையும், ஏன், தன்னை முழுமையாகவே கையளிக்கின்றான். இதற்குப் பரிசுத்த ஆவியின் உதவி தேவை; இவர் நமக்கு இறைவெளிப்பாட்டில் ஆழ்ந்த அறிவைத் தந்து, அதை நன்குணரச் செய்து, விசுவாசத்தை இடைவிடாமல் நிறைவாக்கிக்கொண்டு வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## முன்னோடி...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டான். உணர்வுகள் யாவும் ஸ்தம்பித்து போய் விட்டன சக்கரியாஸுக்கு.

வழக்கத்தை விட இன்று சக்கரியாஸ் பீடத்தில் நின்று கொண்டிருப்பது குறித்து வெளியே கூடி நின்ற மக்களின் முகத்தில் ஆவல் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

அதோ சக்கரியாஸ் பீடத்தினின்று தளர்ந்த நிலையோடு இறக்கி வருகிறார். "தாமதத்திற்குக் காரணம் என்ன?" என்ற கேள்விக் கணையோடு அவரை மொய்த்துக் கொள்கின்றனர் மக்கள். ஆனால் அவரோ எந்தப் பதிலையும் கூறமுடியாதவராக கைகளால் சைக்கினை செய்து கொண்டிருந்தார். தூபம் காட்டும் போது, தேவாலயத்தில் ஏதோ ஒரு அற்புதத்தைக் கண்டிருக்கிறார் என்பதை மட்டும் மக்கள் அப்போது ஊகிக்கக் கூடியதாக இருந்தது.

★ ★ ★

காலம் ஓடியது. மலடி என்று மற்றவர்களால் அழைக்கப்பட்ட எலிசபேத் அம்மாள் ஒரு குமாரனை ஈன்றெடுத்து மகிழ்ச்சிக் கடலில் திளைத்தாள்.

எட்டாம் நாள் குழந்தைக்கு நாமகரணஞ் செய்யும் நாள். தகப்பனின் பெயரையே பிள்ளைக்கும் வைக்க வேண்டும் என்றனர் அங்கு குடியிருந்தோர். ஆனால், சக்கரியாசோ அதை மறுத்து பிள்ளைக்குச் சூட்ட வேண்டிய நாமத்தை ஒரு கற்பலகையில் எழுதினார். "அருளப்பன்" என்று எழுதியதை வாசித்துக் காட்டினார். அதுவரை ஊமையாய் இருந்த வரது வாய் பேசும் சக்தியைப் பெற்று விட்டது கண்ட அயலார், சுற்றத்தார் எல்லோரும் குழந்தை அருளப்பனோடு இறைவன் இணைந்து நிற்கிறார் என்று வாழ்த்திப் போற்றினர். இவரது பிறப்பின் திருவிழா இம்மாதம் 24ந் திகதி கொண்டாடப்படுகிறது.

ஆமாம், கருவிலேயே கடவுளின் கருணையைப்பெற்று, உருவமாகி உலகத்திற் உதித்த போது உன்னத தேவனின் சித்தத்தை வெளிக் காட்டி, வனாந்தரத்திலே தவமிருந்து தன்னாட்டை அழிவுப் பாதைக்குச் செல்லாது அடிக்கடி எச்சரிக்கை செய்து, எல்லாம் வல்ல இறைமகனின் வரவுக்கு மக்களை ஆயத்தம் செய்து, அவருக்கு ஞானமுழுக்குச் செய்து சத்தியத்தைப் போதித்ததற்காக தலையை இழந்து அளவற்ற மகிமையடைந்த அருளப்பரைப் போல் நாமும் வழிநடந்து புனிதராவோம்.

## புளியந்தீவு புனித அந்தோனி...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

கல்வாரியும் கட்டப்பட்டன. இப்போது தேவாலயம் சிறிது சிறிதாக சிதைந்து வருகின்றது இது கத்தோலிக்கராகிய எல்லோருக்கும் வேதனையைக் கொடுக்குமென்பதில் ஐயமில்லை. ஓடுவிற்றல், உபகாரிகளிடத்திலிருந்து உதவி பெறுதலாகிய முயற்சிகளில் இச் சங்கம் ஈடுபட்டு வருகின்றது. நமது பிற் சந்ததியினரும் கண்டு பெருமைப்பட வேண்டிய புராதன சின்னமாக தேவாலய திருப்பணிக்கு உதவவேண்டியது கத்தோலிக்கராகிய அனைவரதும் தவிர்க்கமுடியாத கடனாகும். சங்கமெடுக்கும் முயற்சிற்கு எல்லோரும் உறுதுணையாயிருந்து புனிதரின் அருளைப் பெறுவார்களாக.

**9-6-72ல் கொடியேற்றமும் நவநாள் ஆரம்பமும்.**

**18-6-72 திருநாள். பகல் பன்னிரண்டு மணிக்கு அன்னதானம்.**


**இலங்கைக் கத்தோலிக்க தமிழ் இலக்கியக் கழகத்தின்**

### சிறந்த வெளியீடுகள்

1. 2ம் வத்திக்கான் சங்கத்தின் எதிரொலி ரூ. 3-25
2. மீட்பரும் குருவும் ரூ. 2-00 (கிறிஸ்தவ மக்களுக்கு உரிய நூல்)
3. வாழ்வளித்த வள்ளல் ரூ. 1-75 (கிறிஸ்தவர்கள் அல்லாதாருக்குக் கிறிஸ்துநாதரை அறிமுகம் செய்ய உதவும் நூல்)
4. குழந்தைகளின் ஞானஸ்நானச் திருச்சடங்கு சதம் 80

### கிடைக்கும் இடங்கள்:

1. மறைக்கல்வி நடுநிலையம், ஆயர் இல்லம், மட்டக்களப்பு.
2. அருட்திரு. S. J. இம்மானுவேல் அடிகள், புனித அன்னம்மாள் கோயில், மானிப்பாய்.
3. மறைக்கல்வி நடுநிலையம், பேராயர் இல்லம், பொறளை, கொழும்பு. 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## பரிசு பெறுபவர்கள்

**மறைக்கல்விப் போட்டி – I இல்** பின்வரும் மாணவர்கள் முறையாக 65 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். அவர்களுள் **முதல் மூன்று பேரும்** பரிசு பெறுவர்.

1. செல்வன். ம. யேசுரத்தினம், விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி:
2. செல்வன். E. C. கிளென்னி, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்நகர்.
3. செல்வி. லுசியாவதி பிரான்சிஸ், வின்சன்ட் மகளிர் கல்லூரி, மட்டுநகர்.
4. செல்வன். மாற்கு ஜோர்ஜ், புனித மிக்கேல் கல்லூரி, மட்டுநகர்.

அருட்திரு. றெக்ஸ் யோசப் செபமாலை அடிகள்.
16-5-72.

## மறைக்கல்விப் போட்டி - 3.

*1. கீறிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களைக்கொண்டு நிரப்புக:*

*(லூக். சுவிசேஷம்) (விரும்பிய 8க்கு விடைதருக)*

(i) ''ஆண்டவரே நான் உமக்குப் ........ ................ புரிய என் .................... என்னைத் தனியே விட்டுவிட்டாளே, உமக்குக் ............?

(ii) ''நான் விட்டு .................................... என் ........................ திரும்புவேன்''

(iii) ''ஆயினும் கடவுளுடைய ................ கேட்டுக் கடைப்பிடிப்பவர்கள் அதிலும் ........ ........................''

(iv) ''ஆனால் பரிசுத்த ஆவியை ............ ............ ........................ பெறுவன்''

(v) ''கடவுளின் ........................ முதலில் .................... இவை அனைத்தும் உங்களுக்குச் .... .................... கொடுக்கப்படும்''

(vi) ''மண்ணுலகில் .............................. மூட்டவே ..........................''

(vii) ''இதோ ........................ சிலர் முதலாவர், ........................ சிலர் கடைசியாவர்''

(viii) ''தன்னை உயர்த்துகிற எவனும் ........................; தன்னை தாழ்த்துகிறவனோ ........................ பெறுவன்''

(ix) ''கடவுளின் அரசில் ........................ உண்பவன் ........................''

(x) ''உப்பு ...................., ஆனால் உப்பு ........................ வேறு எதனால் ........................ ஏற்றல் பெறும்?''

(xi) ''தொண்ணூற்றென்பது ................ குறித்து வானத்தில் உண்டாகும் ................ மனந்திரும்பும் ஒரு ........................ குறித்து .................... மகிழ்ச்சி உண்டாகும்''

*(திருமறை விளக்கம்) (விரும்பிய 6க்கு விடை தருக.)*

(xii) அர்ச்சியசிஷ்டர்களுடைய சமுதீதப் பிரயோசனத்தில் சேர்ந்தவர்கள்:
1.
2.
3.

(xiii) ஒரு மனிதன் ................, ................ .................... மறுபிறப்பு அடையாதிருந்தால் சர்வேசுரனுடைய இராச்சியத்தில் நுழைய மாட்டான்.

(xiv) நாம் கடவுள் ................ ............ விசுவசிக்கவேண்டும்.

(xv) நாம் கடவுள் பேரில் நம்பிக்கை வைப்பதற்குரிய காரணங்கள்:
1.
2.
3.

(xvi) நாம் எல்லாவற்றிற்கும் மேலாகக் கடவுளை அன்பு செய்யவேண்டியதன் காரணங்கள்:
1.
2.

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்...

*(14ம் பக்கத் தொடர்ச்சி)*

(xvii) உத்தமதனத்திற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறவர் ....................

(xviii) நாம் செபம் செய்யும் பொழுது
1. 4.
2. 5.
3. செபம் செய்யவேண்டும்.

**2. பின்வரும் கூற்றுகளில் மூன்றினுக்குச் சுருக்கமான, தெளிவான விடைதருக.**

அ. ''என்னைப் பின்செல்ல விரும்புகிறவன், தன்னையே மறுத்துத் தன் சிலுவையை நாள்தோறும் சுமந்துகொண்டு என்னைப் பின் தொடரட்டும்''

ஆ. ''கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவன் எவனும் கடவுளின் அரசிற்குத் தகுதியற்றவன்''

இ. ''அறுவடையோ மிகுதி; வேலையாட்களோ குறைவு. ஆதலால் தம் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள்''

ஈ. ''தனக்கு எதிராய்ப் பிரியும் எந்த அரசும் பாழாய்ப் போகும்''

உ. ''எவனும் விளக்கை ஏற்றி நிலவறையிலோ மரக்காலின் கீழோ வைப்பதில்லை. மாறாக உள்ளே வருவோரெல்லாரும் வெளிச்சத்தைக் காணும்படி விளக்குத் தண்டின் மீது வைக்கிறான்.

**3. பின்வருவனவற்றுள் மூன்றுக்குச் சந்தர்ப்பம் கூறுக.**

(i) ''வேலை செய்ய ஆறு நாட்கள் உண்டே, அந்நாட்களில் வந்து குணம் பெற்றுப் போங்கள். ஓய்வு நாளில் ஆகாது''

(ii) ''அப்பா, வானகத்திற்கு எதிராகவும் உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன், இனிமேல் நான் உம்முடைய மகன் என்று எண்ணப்படத் தகுதியற்றவன். என்னை உம்முடைய கூலியாட்களுள் ஒருவனாக நடத்தும்''

(iii) ''ஆகவே தீயோராகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிவீர்களானால், வானகத்திலுள்ள உங்கள் தந்தை, தம்மிடம் கேட்பவர்களுக்கு எவ்வளவோ அதிகமாய்ப் பரிசுத்த ஆவியை அளிப்பார்''

(iv) ''இறந்தோர் தங்கள் இறந்தோரை அடக்கம் செய்து கொள்ளட்டும். நீ போய் கடவுளுடைய அரசை அறிவி''

**4. பின்வருவனவற்றுள் ஒன்றிற்கு விடை தருக.**

1. கட்டுரை (150-200 சொற்கள்)
   - அ. ''இறைவனின் வார்த்தை எமது வாழ்க்கை'' அல்லது
   - ஆ. ''இன்றைய ஒழுங்கு நாளைய வாழ்வின் அத்திவாரம்''

2. ''யான் பெற்ற பெருவாழ்வு பெறுக இவ்வையகமும்'' எனும் இக்கூற்றைக் கிறீஸ்தவன் என்ற முறையில் எப்படி விளங்குகின்றீர் என்பதை 100-150 இடைப்பட்ட சொற்களுக்குள் விபரிக்குக.

---

விடைப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பும் பகுதி.

**மறைக்கல்விப் போட்டி – 3**

**(விடை அனுப்பவேண்டிய கடைசித் திகதி 1–7–72)**

மாணவன்/மாணவி பெயர்:......................
..................................................................
பாடசாலையின் பெயரும் முகவரியும்:........
..................................................................
..................................................................

..................................................
மாணவன்/மாணவியின் கையொப்பம்

..................................................
தலைமை ஆசிரியர்/தலைவர் கையொப்பம்

---

விடைப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி:-
**அருள் திரு. றெக்ஸ் யோ. செபமாலை அடிகள்**
**ஆயர் இல்லம், மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## கிறிஸ்தவ போதக வழிகாட்டி

**பாடம் 35:**

**கிறிஸ்துநாதரைப் பின்செல்லுதல்**

இப்பாடம் க. தி. விளக்கத்தின் 69ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. நாம் கிறிஸ்துவைப் பின்செல்ல, அவர் நம்மில் குடிகொண்டு, தம் சொல்லாலும் செயலாலும் நமக்குக் கற்பித்து, நமக்கு ஒளியும் வலிமையும் தந்து உதவுகிருர்.

2. கிறிஸ்துநாதருடைய சீடனின் மிக முக்கிய அலுவல், கடவுளின் மகிமை, நமது இரட்சிப்பு, அயலானின் இரட்சிப்பு ஆகியவற்றில் தனிப்பட்ட கவனம் காட்டல்.

3. நாம் கிறிஸ்துநாதருடைய சீடர்கள் என்ற முறையில் அற்ப பாவத்தைக்கூட விலக்கிவிட இயன்ற அளவு முயலவேண்டும்.

4. கிறிஸ்துவைப்போல் தன் சிலுவையைச்சுமந்து கொண்டு பரித்தியாகக் கிரிகைகளைச் செய்து அவரையே பின்பற்ற முன்வர வேண்டும்.

5. கிறிஸ்துவின் உண்மையான சீடனின் தாழ்ச்சி கடவுளுக்குமுன் தான் எத்துணை அற்பன் என்னும் உணர்ச்சியுடனும், அடக்கத்தோடும் பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மையுடனும் காணப்பட வேண்டும்.

6. நாம் அருள்நிலையில் இருக்கும்போது செய்யும் நற்கிரிகைகளால் சம்பாதிக்கக் கூடியவை.

1. இவ்வுலகத்திற்குத் தேவையான அருள் வளர்ச்சி.
2. மோட்சத்தில் அழியாத சம்பாவனை.

**பயிற்சி:**

**சிதறிக்கிடக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வசனமாக்குக:-**

1. ''இடுங்கள், நீங்களும் உத்தமராய், இருக்கிற, பரமண்டலங்களில், உத்தமராய் பிதா, உங்கள், இருக்கிறதுபோல்''.

2. ''தன், கொண்டு, சிலுவையைச் சுமந்து, இருக்கக்கூடாது, என்பின்னே எனக்குச் சீடனுக, வராத எவனும்''.

3. ''நான் உங்களுக்கு, நீங்களும் செய்யுமாறு, எவ்விதம், செய்தேனே, உங்களுக்கு, மாதிரிகை, அவ்விதமே காண்பித்தேன்''.

4. ''தாழ்ச்சியும், நான் உள்ளவனுய், சாந்தமும், கற்றுக்கொள்ளுங்கள், என்று, என்னிடத்தில் இருக்கிறேன்''.

5. ''சீவியத்தின், இருளிலே, ஒளியைக் கொண்டிருப்பான், நடவாமல், என்னைப் பின் செல்லுகிறவன்''.

## ''பணிந்திட்டோம் பாலையூற்று மரியே உன்னை''



பணிந்திட்டோம் பாலையூற்று மரியே உன்னைப்
பரமனிடம் வரங்கள் பல பெற்றுத் தாரும்
அணியணியாய்த் திரள்திரளாய் அண்டி வந்தோம்
ஆதரிப்பாய் அரவணைப்பாய் அம்மா, தாயே!
பிணிநிறைந்த உடலெடுத்துப் பிறந்துவிட்டோம்
பிசாசிற்கு அடிமைகளாய் வளர்ந்துவிட்டோம்
தணியாதோ எம்துன்பம் சொல்வீர் அம்மா
தாயொத்த பாலையூற்றின் பதிவாழ் மரியே.

கரடிபுலி வாழுகின்ற காட்டில் நின்று
கருணைக்கண் கொண்டெம்மை நோக்கி நிற்பாள்
வரம்பல தந்திடுவேன் வாரீர் என்பாள்
வரையாது வளங்கிடும் வள்ளல் ஆவாள்
பரம்பொருளாம் பரமனைக் கரத்தில் தாங்கி
பாவியெமைப் பரிவுடனே பார்த்து நிற்பாள்
அரவணைத்து அருள்புரியும் அன்புத் தாயை
அண்டிடுவோம் அனைவருமே விரைந்து வாரீர்'

— ஏ. டபிள்யூ. அரியநாயகம்.

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S. S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1-6-72ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media